**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

## வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களம்

**தலைப்பு: வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமை திட்டத்தின் (TNSWS) மாற்ற முகாமைத்துவம், தொடர்பாடல்கள் மற்றும் திறன் மேம்பாட்டுக்காக ஆலோசனை நிறுவனம் ஒன்றின் தேர்வு**

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான (EOI) கோரிக்கை

UN/CEFACT பரிந்துரைகளுக்கு அமைவாகவும் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்பாட்டுக்கு உட்பட்டும் (WTO-TFA) இலங்கை அரசாங்கத்தின் (GOSL) கடப்பாடுகளுக்கு இணங்க, GOSL இனால் வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமை திட்டம் (TNSWS) செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த தேசிய டிஜிட்டல் தள ஒற்றை இணையவழி வாயில் ஒன்றின் மூலம் அனைத்து ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் இடைமாற்றுச் சரக்கேற்ற ஆவணத்தை சமர்ப்பிப்பதற்கு வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்குகிறது.

சூழலுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட விரிவான மாற்ற முகாமைத்துவ, தொடர்பாடல் மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் தொடர் ஒன்றை வடிவமைப்பது மற்றும் செயற்படுத்துவதற்கு அனுபவம் பெற்ற தேசிய ஆலோசனை நிறுவனம் ஒன்றை ஈடுபடுத்த நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் (DTIP) கீழ் நிறுவப்பட்ட திட்ட செயற்பாட்டு பிரிவு (PIU) உத்தேசித்துள்ளது.

**ஒப்படையின் நோக்கம்**

இந்த ஆலோசனைச் சேவையின் நோக்கம், அரசின் எல்லை முகவர் நிறுவனங்களும் தனியார் துறைப் பங்குதாரர்களும் முழுமையாக TNSWS இனை தடையற்ற வகையில் ஏற்றுக்கொண்டு, அதன் நீண்டகால நிலைத்தன்மையை உறுதிசெய்யும் வகையில் மாற்றத்தை எளிதாக்குவதாகும். கட்டமைக்கப்பட்ட மாற்ற முகாமைத்துவம், மூலோபாய தொடர்பாடல், மற்றும் இலக்குவைக்கப்பட்ட திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம், இலங்கையின் வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமையை நிலையான முறையில் இயக்குவதற்குத் தேவையான மனிதவளம், செயல்முறைகள் மற்றும் நிறுவனங்கள் முழுமையாகத் தயார்படுத்தப்பட்டு, தேவையான திறன்களுடன் உருவாக்கப்படுவதை இப்பணி உறுதிசெய்யும்.

மேலுள்ள ஒப்படைக்காக தமது ஆவர் வெளிப்பாட்டை (EOI) வழங்குவதற்கு தகுதி பெற்ற ஆலோசனை நிறுவனங்களுக்கு வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமை திட்டத்தின் சார்பில் அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழுவினால் (CPCM) அழைப்பு விடுக்கப்படுகிறது.

**குறுகிய பட்டியலுக்கான அளவுகோல்**

ஆலோசனை நிறுவனங்கள் தமது பிரதான வர்த்தகம், செயற்பாட்டில் உள்ள ஆண்டுகள், நிதி நிலை மற்றும் நிர்வாகத் திறனின் ஆவண அத்தாட்சிகளை வழங்குதல் வேண்டும். மாற்ற முகாமைத்துவம், தொடர்பாடல்கள் மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களை வழங்கியதில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு மற்றும் அதனுடன் சேர்த்து இதனையொத்த பண்புடைய திட்டங்களை செயற்படுத்தியதில் அனுபவம், தேர்ச்சிபெற்ற தொழில்முறையாளர்கள் இருப்பதை சமர்ப்பிப்புகள் நிரூபித்தல் வேண்டும். மும்மொழி சேவை வழங்கல் சூழல்களில் சேவைகளை வழங்கிய நிரூபிக்கப்பட்ட அனுபவம் கொண்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தேர்வு முறை:** 2007 அரச பெறுகை வழிகாட்டலில் ஆலோசர்களின் தேர்வு மற்றும் பணியமர்த்தலின்படி, அளவு மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS) முறை.

**EOI சமர்ப்பிப்பு விபரங்கள்**

1. விரிவான பிரத்தியோக தேவைகளுக்கான குறிப்பு விதிமுறையை (TOR) பார்க்கவும்.
2. www.onetrade.lk என்ற OneTrade இணையதளத்திற்கு பிரவேசித்து குறிப்பு விதிமுறை (TOR) மற்றும் EOI சமர்ப்பித்தல் வடிவத்தை தரவிறக்கம் செய்ய முடியும் அல்லது nsw@tipd.treasury.gov.lk என்ற மின்னஞ்சல் மூலம் பெறுகை நிபுணர்களிடம் இருந்து மேலதிக விபரத்தை பெற முடியும்.
3. ஆர்வமுடைய ஆலோசனை நிறுவனங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து "EOI விபரப் படிவம்" உள்ளடங்கிய பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தை பயன்படுத்தி தமது EOI இனை சமர்ப்பித்தல் வேண்டும்:

   i. நிறுவனத்தின் செல்லுபடியான வர்த்தகப் பதிவு மற்றும் சட்ட அந்தஸ்துகள்.

   ii. ஆலோசனை நிறுவனத்தின் பொதுவான அனுபவம் (குறைந்தது பத்து (10) ஆண்டுகள்) மற்றும் **தகைமைகள்.**

   iii. இலங்கை ரூபா 30 மில்லியனின் ஒட்டுமொத்த மதிப்பு ஒன்றுடன் அண்மித்த ஐந்து (05) ஆண்டுகளில் இதனையொத்த பண்பு மற்றும் சிக்கற்பாடுடையதாக முன்னெடுத்த திட்டங்கள் மற்றும் ஒப்படைகளின் குறைந்தது மூன்று (03) குறிப்புகளுக்கான ஆவண ஆதாரங்கள்.

   iv. ஒப்படைக்காக முன்மொழியப்படும் முக்கிய தொழில்முறை பணியாளர்களின் தகைமைகள், அனுபவம் மற்றும் திறன்.

   v. அண்மித்த/ கடந்த 3 தொடர்ச்சியான ஆண்டு காலத்தில் 100 மில்லியன் இலங்கை ரூபாவின் ஆண்டு புரள்வு ஒன்றுக்காக நிறுவனத்தின் நிதி வலுத்தன்மை.

   vi. கூட்டு முயற்சியாக (JV) சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள்: அற்றோனித் தத்துவம் (இது நொத்தாரிசு மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாகவோ அல்லது பொருத்தமான அதிகாரம் பெற்ற நிறுவனத்தால் சான்றளிக்கப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும்) அனைத்து தரப்பினராலும் கையொப்பமிடப்பட்ட பின்வரும் உறுதிமொழியை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்: (i) அனைத்து தரப்பினரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாளர்களாக இருப்பார்கள் என்பதை குறிப்பிடுதல் மற்றும் (ii) விலைமனு செயல்முறையின் போது, கூட்டு முயற்சியில் (JV) உள்ள ஏதேனும் மற்றும் அனைத்து தரப்பினரின் சார்பாகவும் அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் அதிகாரம் பெற்ற ஒரு பிரதிநிதியை நியமித்தல். JV இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால், ஒப்பந்தத்தைச் செயற்படுத்தும் காலத்திலும் அந்த பிரதிநிதி இத்தகைய அதிகாரத்தை கொண்டிருப்பார். TOR இன்படி, திட்ட வழங்கல்கள் மற்றும் ஒவ்வொரு தரப்பினரும் மேற்கொள்ளும் முயற்சி அளவு ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட EOI இனை பின்வருமாறு சமர்ப்பித்தல் வேண்டும்:
   - ஒன்று (01) அசல் ("அசல்" என தெளிவாகக் குறிப்பிடவும்)
   - இரண்டு (02) நகல்கள் ("பிரதி" என தெளிவாகக் குறிப்பிடவும்)
   - ஒரு (01) மென் பிரதி (USB drive ஒன்றில் கடவுச் சொல்லால் பாதுகாக்கப்பட்ட PDF வடிவம்)
5. **சமர்ப்பிக்கும் முறை** : கீழ் தரப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறை ஒன்றில் பதிவுத் தபால் அல்லது கைகளால் சேர்த்தல்
6. **சமர்ப்பிக்கும் இறுதித் திகதி** : 2026 ஒகஸ்ட் 10 ஆம் திகதி பி.ப. 4.30
7. EoI இனைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "TNSWSP இற்காக மாற்ற முகாமைத்துவம், தொடர்பாடல்கள் மற்றும் திறன் மேம்பாட்டை முன்னெடுப்பதற்கு ஆலோசனை நிறுவனம் ஒன்றை பணியமர்த்துவதற்கான ஆர்வ வெளிப்பாடு" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
8. சமர்ப்பிக்கும் முகவரி:

**தலைவர்**<br>
**அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு**<br>
**வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமை திட்டம்,**<br>
**219ஏ, இரண்டாவது மாடி, தொகுதி 2, BMICH**<br>
**பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07. தொலைபேசி: 011 269 6947**<br>
**மின்னஞ்சல்: nsw@tipd.treasury.gov.lk**<br>
**இணையதளம்: www.onetrade.lk**